<u>செய்தி வெளியீடு</u>

**மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் திரு. பன்வாரிலால் புரோகித், அவர்களை ‘‘இந்தியாவை தெரிந்து கொள்ளுங்கள்’’ திட்டத்தின் கீழ் வெளிநாட்டில் இருந்து தமிழ்நாட்டிற்கு வருகை தந்துள்ள 40 இளைஞர்கள் இன்று (29.09.2018) சந்தித்தார்கள்**

ஆளுநர் மாளிகையில் மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் திரு. பன்வாரிலால் புரோகித், அவர்களை காலை 11.00 மணியளவில் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சகத்தின் மூலம் இந்தியாவின் பண்பாடு, பாரம்பரியம் மற்றும் வரலாற்று அம்சங்களை அறிந்து கொள்வதற்காக டிரினிடாட் & டொபாகோ, மலேசியா, மொரிஷியஸ், மியான்மர், பிஜி, இலங்கை, பிரான்ஸ், சூரினாம், கயானா, தென் ஆப்பிரிக்கா ஆகிய நாடுகளிலிருந்து ‘‘இந்தியாவை தெரிந்து கொள்ளுங்கள்’’ (Know India Programme) திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டிற்கு வருகை தந்துள்ள பங்கேற்பாளர்கள் இன்று (29.09.2018) சந்தித்தார்கள்.

இச்சந்திப்பின்போது மாண்புமிகு ஆளுநர் அவர்கள் தமிழகத்தின் பண்பாடு, பாரம்பரியம் மற்றும் வரலாற்றுச் சிறப்புகளை வெளிநாட்டில் இருந்து வந்திருந்த 40 இளைஞர்களிடம் எடுத்துக் கூறினார்கள்.

இந்திய வெளியுறவுத்துறை அமைச்சகம் இந்திய குடிபிறப்பை (Indian Origin) சார்ந்த இளைஞர்களுக்கு (வயது 18 முதல் 30 வரை) இந்தியாவின் பண்பாடு, பாரம்பரியம் மற்றும் இந்தியாவின் அம்சங்களை சமகாலங்களில் அறிந்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கில் 25 நாள் சுற்றுலா ஏற்பாடு செய்து வருகின்றது. இத்திட்டத்தின் கீழ் இந்தியாவில் உள்ள இரண்டு மாநிலங்கள் அல்லது யூனியன் பிரதேசங்களில் சுற்றுலா ஏற்பாடு செய்யப்படுகின்றது. அதன் தொடர்ச்சியாக தமிழகம் மற்றும் புதுவையில் வெளிநாட்டிலிருந்து வருகைதந்துள்ள 40 இளைஞர்களுக்கு 10 நாட்கள் 29.09.2018 முதல் 08.10.2018 வரை சுற்றுலா செல்ல தமிழ்நாடு சுற்றுலாத் துறை மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம் ஏற்பாடு செய்துள்ளது.

தமிழகம் மற்றும் புதுச்சேரிக்கு வெளிநாட்டிலிருந்து வந்துள்ள 40 இளைஞர்களுக்கு தமிழகத்தில் உள்ள முக்கிய சுற்றுலா தலங்களான மாமல்லபுரம், திருவண்ணாமலை,

தஞ்சாவூர், திருச்சி, கொடைக்கானல், மதுரை, கன்னியாகுமரி, இராமேஸ்வரம் ஆகிய பகுதிகளுக்கு சென்று அங்குள்ள பாரம்பரிய சின்னங்கள், சிற்பக்கலைகள், ஓவியக்கலைகள் மற்றும் திருக்கோயில்களுக்குச் சென்று தமிழகத்தின் பாரம்பரியம், கலை, பண்பாடு மற்றும் தொன்மை ஆகியவற்றை அறிந்து கொள்வார்கள்.

இந்த 10 நாட்கள் சுற்றுலாவில் மேற்படி சுற்றுலாத் தலங்களில் உள்ள சுற்றுலா இடங்கள், பல்கலைக்கழகங்கள், தொழிற்சாலைகள் மற்றும் விவசாயப்பண்ணைகள் போன்றவற்றை பார்வையிடுவார்கள்.

இந்த சந்திப்பின்போது திரு.ஆர்.ராஜகோபால், இ.ஆ.ப., ஆளுநரின் கூடுதல் தலைமைச் செயலாளர், திரு.V.பழனிகுமார், இ.ஆ.ப., கமிஷனர், சுற்றுலாத்துறை மற்றும் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், திரு.P.K. அசோக் பாபு, மண்டல பாஸ்போட் அலுவலர் மற்றும் திரு. C.கண்ணன், மத்திய வெளியுறவுத்துறை அமைச்சக சார்பு செயலாளர் ஆகியோர் உடன் இருந்தனர்.

---

ராஜ்பவன், சென்னை – 22 ஒம்/–

நாள் 29.09.2018 இணை இயக்குநர் (ம.தொ)

**<u>Press Release</u>**

**The 40 member team of Indian Diaspora Youths under the "know India programme" met the Hon'ble Governor of Tamil Nadu at Raj Bhavan, Chennai today (29.09.2018)**

Hon'ble Governor of Tamil Nadu Thiru. Banwarilal Purohit addressed the 40 member team of Indian Diaspora Youths who have come to know about the Indian Culture, Heritage Historical importance from Trinidad and Tobago, Malaysia, Mauritius, Myanmar, Fiji, Sri Lanka, Suriname, Guyana, South Africa under the "know India programme" organized by the Ministry of External Affairs, Government of India at Raj Bhavan, Chennai today (29.09.2018).

During the meeting, Hon'ble Governor of Tamil Nadu had explained about the Culture, Heritage Historical importance of Tamilnadu to the Indian diaspora youths from various countries.

The Ministry of External Affairs, Government of India has been arranging 25 days tour to the Indian diaspora youths (age between 18 to 30 years) to know the contemporary Indian Culture, Heritage Historical Important. In this Programme, two States and Union Territory will be covered. In this Context, a tour of 10 days in Tamil Nadu and Puducherry from 29.09.2018 to

08.10.2018 for 40 youths came from the different countries have been arranged by the Tourism Department and TTDC Ltd.

The 40 youths from different countries will be taken to Mamallapuram, Thiruvannamalai, Thanjavur, Tiruchirappali, Kodaikanal, Madurai, Kanniyakumari, Rameswaram to know about the Heritage monuments sculptures, Architecture, Temples and Culture. During this 10 days tour, the tourist spots in the above places, University, Industry and Agriculture Farms will be visited.

During the meeting, Thiru. R.Rajagopal, I.A.S., Additional Chief Secretary to Governor, Thiru. V.Palanikumar, I.A.S., Commissioner of Tourism & Chairman and MD, TTDC, Thiru. P.K. Ashok Babu, Regional Passport officer and Thiru. C. Kannan, U.S. Ministry of External Affairs, Government of India were present.

---

Raj Bhavan, Chennai – 22 Sd/-

Date : 29.09.2018 Joint Director (PR)